


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ பிப்ரவரி. 25, 2023 சென்னை & புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 142 ❖ ரூ.10

### வேங்கைவயல் சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில்

# மாற்றுங்கள்

## சிபிசிஐடி வசம் இருக்கும் வழக்கை சிபிஐ அல்லது ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரிக்க வழக்கறிஞர் மனு

**புதுடெல்லி பிப்.25-**

**வேங்கைவயல் சம்பவம் குறித்து சிபிஐ அல்லது ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்து விசாரணைக்கு உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**



புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயலில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக்கழிவு கலக்கப்பட்டது டிச.26-ம் தேதி தெரியவந்தது. அன்றிலிருந்து அந்தக் குடிநீர்த் தொட்டியில் இருந்து குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டு, மாற்றுத் தொட்டியில் இருந்து விநியோகம் செய்யப்பட்டது.

மனிதக் கழிவு கலக்கப்பட்ட சம்பவம் குறித்து வெள்ளனூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மேலும், இதுகுறித்து ஏடிஎஸ்பி தலைமையில் 11 பேரை உள்ளடக்கிய விசாரணைக் குழு விசாரித்து வந்தது. இந்த வழக்கு தொடர்பாக இதுவரை 85 சாட்சிகளிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. மேலும், தமிழக அரசின் சமூக நீதிக் கண்காணிப்புக்குழுவினர் வேங்கைவயலில் நேரில் ஆய்வு செய்துள்ளது.

இது குறித்து சட்டப்பேரவையில் விளக்கம் அளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், இச்சம்பவத்தில் ஈடுபட்ட உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். இதனைத்தொடர்ந்து, இந்த வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி டிஜிபி சைலேந்திர பாபு உத்தரவிட்டார். இது தொடர்பான விசாரணை நடந்து வருகிறது.

இந்நிலையில், உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வி.மார்க்ஸ் ரவீந்திரன் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அதில், "வேங்கைவயல் கிராமத்தில் குடிநீர் தொட்டியில் மனிதக் கழிவு கலந்த விவகாரம் குறித்து சிபிஐ அல்லது ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்து விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். மேலும், இந்த சம்பவத்தை தடுக்கத் தவறிய அதிகாரிகள், நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் கோரியுள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**

## அதிமுக ஆட்சியில் தொடரப்பட்ட நீட் தேர்வு வழக்கை அரசு வாபஸ் பெற்றது ஏன்?–சுகாதாரத்துறை அமைச்சர் விளக்கம்

**சென்னை பிப்.25-**

"அதிமுக அரசின் தவறான வழக்கினை திரும்ப பெற்றதை, ஏதோ நீட் தேர்வு வழக்கையே திரும்ப பெற்று விட்டது போலவும், திமுக அரசு தாக்கல் செய்துள்ள புதிய வழக்கினை மறைத்து, திசை திருப்பும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது கண்டனத்திற்குரியது" என்று தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் திமுக தலைமையிலான புதிய அரசு 07.05.2021-இல் பொறுப்பேற்றவுடன் தமிழக முதல்வர் 05.06.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பினை தொடர்ந்து, நீட் தேர்வு பற்றி முழுமையாக ஆராய்ந்து, தமிழ்நாட்டு மாணவர்களின் நலன் காப்பதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அளித்திட, 10.06.2021 அன்று ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே. ராஜன் தலைமையில், உயர் நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், நீட் நுழைவுத் தேர்வு முறையிலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிப்பதற்காக, தமிழ்நாடு மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம் 2021 என்ற சட்டமுடிவு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு. குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த சட்ட முன் வடிவு குறித்து, ஒன்றிய அரசால் கோரப்பட்ட விளக்கங்களுக்கு தமிழ்நாடு அரசு உரிய விளக்கம் தந்துள்ள நிலையிலும், இந்த சட்ட முன்வடிவுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஒன்றிய அரசு மவுனம் காத்து வருகிறது. எனவே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவின் மீது குடியரசு தலைவரின் ஒப்புதலை விரைவாக பெற்றுத் தருமாறு ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

அதிமுக அரசால் தவறான சட்டப் பிரிவுகளின் படி தொடரப்பட்ட இந்த வழக்கினை மேற்கொண்டு தொடர்ந்து நடத்தினால், அது நீட் தேர்வுக்கு எதிரான நமது போராட்டத்திற்கும், நமது மாணவர்களின் நலனுக்கும் பாதகமாக அமையும் என்று சட்ட வல்லுனர்கள் கருத்து தெரிவித்தனர்.

தமிழ்நாடு அரசு மருத்துவ மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம், 2021 குடியரசு தலைவரின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ள சூழ்நிலையில், 18.01.2023 அன்று தமிழக முதல்வர் தலைமையில் நடைபெற்ற உயர்நிலை ஆய்வுக் கூட்டத்தில், இது குறித்து உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்களுடன் கலந்தாலோசிக்கப் பட்டது. இந்த ஆலோசனையின் அடிப்படையில், தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019 இன் பிரிவு 14, இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையச் சட்டம், 2020 மற்றும் தேசிய ஹோமியோபதிச் சட்டம், 2020 ஆகியவை முறையே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 14-வது பிரிவை மீறுவதாக அறிவிக்கவும், தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019 இன் பிரிவு 14, இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையச் சட்டம், 2020 மற்றும் தேசிய ஹோமியோபதிச் சட்டம், 2020 ஆகியவை முறையே கூட்டாட்சிக் கொள்கைகளை மீறுவதாலும், இந்திய அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பு மாற்றியமைப்பதாலும், அவற்றினை செல்லாததாக அறிவிக்கவும்,

தேசிய மருத்துவ ஆணையத்தின் முதுகலை மருத்துவக் கல்வி விதிமுறைகள், 2000 இன் விதிமுறைகள் 9 மற்றும் 9A ஆகியவை இந்திய அரசியலமைப்பின் 14 வது பிரிவு மற்றும் இந்திய அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பின் ஒரு பகுதியாக இருக்கும் கூட்டாட்சி கொள்கைகளை மீறுவதாக அறிவித்தும் ஆணையிடவும், 2007-ஆம் ஆண்டு பல் மருத்துவ பாடநெறி விதிமுறைகளில் I(2), I(5) மற்றும் II ஆகிய விதிமுறைகள், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 14வது பிரிவு மற்றும் கூட்டாட்சிக் கொள்கைகளை மீறுவதாக அறிவிக்கும் ஒரு தீர்ப்பு மற்றும் ஆணையை வழங்கவும்,

அதிமுக அரசின் தவறான வழக்கினை திரும்ப பெற்றதை - ஏதோ நீட் தேர்வு வழக்கையே திரும்ப பெற்று விட்டது போலவும், திமுக அரசு தாக்கல் செய்துள்ள புதிய வழக்கினை மறைத்து, திசை திருப்பும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது கண்டனத்திற்குரியது.

நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டு மாணவர்களுக்கு விலக்கு பெறுவதுமட்டுமன்றி, பொருளாதார நிலையிலும் சமூக நீதி அடிப்படையிலும் பின்தங்கியுள்ள மாணவர்களின் எதிர்காலத்தினை பாதுகாத்திட நீட் தேர்வை அகற்றிடவும், கொள்கைபிடிப்புடனான சட்டப் போராட்டத்தினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடத்தி வென்றெடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.



▶ தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வரும் அதிமுகவின் பொது செயலாளராகவும் இருந்து மறைந்த ஜெயலலிதாவின் பிறந்தநாள் பிப்ரவரி 24ஆம் தேதி நேற்று கொண்டாடப்பட்டது. புதுக்கோட்டை மாவட்ட ஓபிஎஸ் ஆதரவாளர்கள் சார்பில் கொண்டாடப்பட்ட கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மாவட்ட செயலாளர் ராஜசேகரன் கழகத்தின் நிரந்தர பொது செயலாளர் என்றும் தாங்களே என்று ஜெயலலிதாவை வாழ்த்தி நகர் முழுவதும் ஒட்டப்பட்டுள்ள போஸ்டரானது பேசும் பொருளாக மாறி இருக்கின்றது.

## பாஜகவை பொறுத்தவரை நாடும் நாட்டு மக்களும் தான் முக்கியம்: பிரதமர் மோடி பேச்சு

மேகாலயா பிப்.25-

பாஜகவிற்கு தேசமும் நாட்டு மக்களுமே முதன்மையானவர்கள் என்று மேகாலயா தேர்தல் பிரசாரத்தில் பிரதமர் மோடி பேசினார்.

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மேகாலயாவில் வரும் 27-ஆம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலை ஒட்டி அங்கு அரசியல் கட்சிகள் தீவிர பிரசாரத்தை தொடங்கியுள்ளன. தேர்தல் பிரச்சாரம் இறுதி கட்டத்தை எட்டி விட்ட நிலையில், நேற்று பிரதமர் மோடி பாஜகவிற்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.



பிரதமர் மோடி கூறியதாவது :- மேகாலயாவில் விரைவில் ஜி 20 மாநாடு நடைபெற உள்ளது. வளர்ந்த நாடுகளில் இருந்து பலரும் மேகாலயாவிற்கு வருகை தர உள்ளனர். மாநிலத்தின் பிம்பத்தை இது உயர்த்தும். 'சப்கா சாத், சப்கா விகாஸ்' என்பதுதான் எங்களின் மதச்சார்பின்மை ஆகும். பாஜகவை பொறுத்தவரை தேசமும் நாட்டு மக்களும் தான் முதன்மையானவர்கள். காங்கிரஸ் கட்சிக்கு மேகாலயாவை பற்றிய நினைப்பு தேர்தல் வந்தால் மட்டுமே வரும். காங்கிரஸ் மற்றும் பிற கட்சிகள் வடகிழக்கு மாநிலங்களை கொள்ளையடிக்கவே பயன்படுத்துகின்றன. தங்களின் ஏடிஎம் போல நடத்துகின்றன. மாநிலத்திலும் பாஜக ஆட்சி மத்தியிலும் பாஜக ஆட்சி என்ற முடிவுக்கு மேகாலயா மக்கள் வந்து விட்டனர்" என்றார்.

## எஸ்விஎஸ் வளாகத்தில் பேக்கரி மஹராஜின் புதுப்பிக்கப்பட்ட புதிய ஷோரூம் திறப்பு

**புதுக்கோட்டை பிப்.25-**

பேக்கரி உலகின் அரசன் என்று சொல்லப்படும் புதுக்கோட்டை பேக்கரி மஹராஜின் புதுப்பிக்கப்பட்ட புதிய ஷோரூம் நேற்று மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்கு வந்தது.



புதுக்கோட்டை சத்தியமூர்த்தி சாலையில் பேருந்து நிலையத்திற்கு எதிரில் எஸ்விஎஸ் வளாகத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் பேக்கரி மஹராஜ் கிளை நவீன காலத்திற்கு ஏற்ற வகையில் அதன் உள்கட்டமைப்புகள் மக்களை எளிதில் கவரும் வகையில் அனைத்து பேக்கரி தயாரிப்புகளும் பேக்கிங் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் நிலையமாக நேற்று முதல் மக்கள் பயன்பாட்டிற்கு வந்தது.

பேக்கரி மஹராஜ் நிர்வாக இயக்குனர் அருண் சின்னப்பா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் புதுக்கோட்டை எஸ்விஎஸ் குழுமத்தின் சேர்மன் பெரியவர் வெங்கடாஜலம் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினார். விழாவில் பேக்கரி மஹராஜ் குழுமத்தின் அனைத்து அங்கத்தினர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அரியலூரில் பேங்க் ஆப் மகாராஷ்டிரா புதிய கிளை திறப்பு விழா

அரியலூர் பிப்.25-

அரியலூரில் பேங்க் ஆப் மகாராஷ்டிரா புதிய கிளை திறப்பு விழா நேற்று நடைபெற்றது.



அரியலூரில் செந்துறை மெயின் ரோடு, கூட்டுறவு பால் பண்ணை அருகில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேங்க் ஆப் மகாராஷ்டிரா வங்கி கிளை திறப்பு விழா நடைபெற்றது. அகில இந்திய அளவில் 2,282-வது கிளையாகவும், சென்னை மண்டல அளவில் 59-வது கிளையாகவும் அமைக்கப்பட்டுள்ள, இந்த பேங்க் ஆப் மகாராஷ்டிரா வங்கி கிளை அலுவலக திறப்பு விழாவில், கிளை மேலாளர் இந்திரஜித் யோகா வரவேற்று பேசினார். அரியலூர் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் லயனல் பெனடிட் முன்னிலை வகித்தார்.

அரியலூர் பேங்க் ஆப் மகாராஷ்டிரா வங்கிக் கிளை அலுவலகத்தை, சென்னை மண்டலத்தின் துணை மேலாளர் ஸ்ரீநிவாஸ் அலுவாலா ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, குத்துவிளக்கு ஏற்றினார். இந்நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற பேராசிரியர் தங்கவேலு, டாக்டர்கள் கண்மணி, ராஜேஸ்வரி, கோல்டன் மோட்டார்ஸ் மற்றும் கோல்டன் மருத்துவமனை பொது மேலாளர் பொன்மணி, பானுமதி, சத்திய ஷீலா, அரியலூர் கூட்டுறவு பால் பண்ணை செயலாளர் சுப்பிரமணி மற்றும் ராஜ்குமார் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## புதுக்கோட்டை செந்துரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில் முனைவோருக்கான ஊக்கப்படுத்துதல் நிகழ்ச்சி

**புதுக்கோட்டை பிப்.25-**

புதுக்கோட்டை மாவட்டம், லெணாவிலக்கில் அமைந்துள்ள செந்துராான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கு தொழில் முனைவோருக்கான ஊக்கப்படுத்துதல் நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரியின் முதலாமாண்டு துறைத் தலைவர் சிவகாமசுந்தரி சிறப்பு விருந்தினர்களை வரவேற்றார்.



சிறப்பு விருந்தினராக புதுக்கோட்டை டிசைன் எண்டர் பிரைசஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கலைச்செல்வன் மற்றும் தலைமை நிர்வாகி பூபதி ராஜா கலந்து கொண்டு பேசுகையில், தங்களது வாழ்க்கை பயணத்தில் ஏற்பட்ட தடைகளை பற்றியும் அவற்றை எதிர்கொண்டு அடைந்த வெற்றி பற்றியும் கூறியதோடு மட்டுமல்லாமல் தொழில் முனைவோருக்காக அரசாங்கம் அறிமுகப் படுத்தியுள்ள பல்வேறு நலத்திட்டங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்கள்.

கல்லூரியின் தலைவர் செல்வராஜ், துணைத் தலைவர் நடராஜன், நிர்வாக இயக்குனர் வயிரவன், முதன்மைச் செயல் அதிகாரி கார்த்திக், கல்லூரியின் முதல்வர் கணேஷ் பாபு, செயலாளர் தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். கல்லூரியின் முதலாமாண்டு உதவிப் பேராசிரியர் சத்யா நன்றியுரை வழங்கினார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் தொடர்பாக 688 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

ஈரோடு பிப்.25-

சோதனைகளில் ரூ.64.34 லட்சம் மதிப்பிலான ரொக்கம் மற்றும் பரிசு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவு வரும் 27-ந் தேதி நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு இன்று மாலை 5 மணியோடு தேர்தல் பிரச்சாரங்கள் நிறைவு பெறுகின்றன. தேர்தலையொட்டி ஈரோடு கிழக்கு தொகுதியில் வாகன சோதனைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இதுவரை நடத்தப்பட்ட சோதனைகளில் ரூ.64.34 லட்சம் மதிப்பிலான



ரொக்கம் மற்றும் பரிசு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார். அதே போல் 688 வழக்குகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும், இதில் அதிகபட்சமாக 547 வழக்குகள் தமிழ்நாடு மதுவிலக்கு தடுப்பு பிரிவில் பதிவு செய்யப்பட்டு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் வெளியூர்களில் இருந்து வந்து பிரச்சாரம் மேற்கொண்டு வரும் அரசியல் கட்சியினர், தேர்தல் நடத்தை விதிகளின்படி நாளை மாலை 5 மணியோடு ஈரோடு கிழக்கு தொகுதியில் இருந்து வெளியேற வேண்டும் என்று தலைமை தேர்தல் அதிகாரி உத்தரவிட்டுள்ளார். ஈரோடு கிழக்கு தொகுதியில் தேர்தலுக்காக 138 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 1,430 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளதாகவும், இதில் 310 வாக்குப்பதிவு இயந்திரங்களில் வி.வி. பேட் வசதி உள்ளதாகவும் சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.

# தென்காசி மாவட்டம், சொக்கம்பட்டி அருகே ஸ்ரீ பாலுடையார் சாஸ்தா கோவில் கும்பாபிஷேக விழா

தென்காசி பிப்.25-

தென்காசி மாவட்டம், சொக்கம்பட்டி அருகே திரிகூடபுரம் தேவர் - யாதவர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கருப்பா நதி அணைக்கட்டு அருகே அமைந்துள்ள ஸ்ரீ பாலுடையார் சாஸ்தா, பத்ரகாளியம்மன் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.



இதில் அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, புண்ணிய யாகா வாசனம், பஞ்ச கவ்யம், தனபூஜை, தேவதானுக்ஞை, வேதிகார்ச்சனை, மகா கணபதி ஹோமம், கோ பூஜை, கஜ பூஜை, பிரம்மச்சாரி பூஜை, கன்னியாபூஜை, சுவாசினி பூஜை, வாஸ்து சாந்தி பிரவேச பலி அங்குரார்பனம், ரக்ஷா பந்தனம், எஜமான வர்ணம், ஆச்சாரிய வர்ணம், கும்ப அலங்காரம், கலா கர்ஷணம், கடம், யாகசாலை பிரவேசம், முதற்கால யாக சாலை பூஜை, திரவ்யாஹுதி,பூர்ணாஹீதி, திருமுறை பாராயணம், விக்னேஸ்வர பூஜை, விசேஷ சாந்தி பூத சுத்தி, இரண்டாம் கால யாகசாலை பூஜை, வேத பாராயணம் திருமுறை பாராயணம், திரவ்யாஹுதி, பூர்ணா ஹீதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல், இரண்டாம் நாள் மாலை விசேஷ சாந்தி பூத சுத்தி மூன்றாம் கால யாக சாலை பூஜை வேத பாராயணம், திருமுறை பாராயணம், யந்திர ஸ்தாபனம் அஷ்டபந்தன மருந்து சாத்துதல், வெள்ளிக்கிழமை விக்னேஸ்வர பூஜை புண்ணிய யாக வசனம், பிம்ப சுத்தி, மூர்த்திரக்ஷாபந்தனம், நாக்காம் யாக சாலை பூஜை, நாடி சந்தானம், ஸ்பர்ஸாஹீதி, திரவ்யா ஹீதீ, மஹ பூர்ணாஹீதி, யாத்ரா தானம், கடம் புறப்பாடு, கோபுரம் மூலஸ்தானம் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது

இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் அன்னதான நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.




# 2 நாள் பயணமாக ஜெர்மனி பிரதமர் இன்று இந்தியா வருகை



டெல்லி பிப்.25-

ஜெர்மனி பிரதமர் ஓலாப் ஸ்கோல்ஸ் 2 நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார். பிரதமர் மோடியை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

இந்தியா-ஜெர்மனி இடையே அரசுகளுக்கு இடையேயான ஆலோசனை நெறிமுறை கடந்த 2011-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதன்படி இருநாட்டு பிரதமர்கள் முன்னிலையில் பல்வேறு துறை அமைச்சர்கள் பங்கேற்கும் ஆலோசனை கூட்டம் நடைபெற்று வருகிறது. இந்த அமைப்பு உருவாக்கிய பிறகு முதல் முறையாக தனிநபர் பயணமாக ஜெர்மனி பிரதமர் ஓலாப் ஸ்கோல்ஸ் இன்று காலை இந்தியா வருகிறார். அவரது இந்த 2 நாள் பயணத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு திட்டமிடப்பட்டு உள்ளன. அந்த வகையில் டெல்லி வந்திறங்கும் அவருக்கு ஜனாதிபதி மாளிகையில் பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்படுகிறது. பின்னர் ஐதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியை அவர் சந்தித்து பேசுகிறார். அப்போது பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகள் குறித்து இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். இந்த பேச்சுவார்த்தையின் முடிவில் இரு தரப்பிலும் ஒப்பந்தங்கள் கைமாறப்படுகின்றன. அத்துடன் கூட்டாக அறிக்கையும் வெளியிடப்படுகிறது.

பிரதமர் மோடியுடனான சந்திப்பை தொடர்ந்து ஐதராபாத் இல்லத்தில் நடைபெறும் வர்த்தக சந்திப்பு ஒன்றில் ஓலாப் ஸ்கோல்ஸ் பங்கேற்கிறார். பிற்பகல் ராஜ்காட் செல்லும் ஜெர்மனி பிரதமர், அங்கு மகாத்மா காந்தி நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார். பின்னர் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி திரௌபதி முர்முவை சந்தித்து பேசுகிறார். தனது 2-வது நாள் நாளை பயணத்திலும் ஜெர்மனி பிரதமர் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். பின்னர் இந்த பயணத்தை முடித்துக் கொண்டு மாலையில் அவர் ஜெர்மனி திரும்புகிறார். பிரதமர் மோடியும், ஜெர்மனி பிரதமரும் கடந்த ஆண்டு 3 முறை சந்தித்து இருந்தனர். அதன் தொடர்ச்சியாக இந்த சந்திப்பு நடைபெற உள்ளதாக டெல்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தியாவும் ஜெர்மனியும் வலுவான பொருளாதார ஒத்துழைப்பை பகிர்ந்து வருகின்றன. மேலும் இந்தியாவின் முதல் பத்து உலக வர்த்தக நட்பு நாடுகளில் தொடர்ச்சியாக ஜெர்மனியும் இடம் பெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

# உளுந்தூர்பேட்டையில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 75-வது பிறந்த நாள் விழா கொண்டாட்டம்

கள்ளக்குறிச்சி பிப்.25-

தமிழகம் முழுவதும் நேற்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 74-வது பிறந்தநாளை முன்னிட்டு அதிமுக நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள், ஜெயலலிதாவின் திருவுருவச் சிலை மற்றும் திரு உருவப்படத்திற்கு மலர்தூவி பிறந்தநாள் விழா கொண்டாடினர். மேலும் பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர், இதன் ஒரு பகுதியாக,



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில், மாவட்டச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான குமரகுரின் வழிகாட்டுதலின்படி, விநாயகா கல்வி குழுமத்தின் தலைவர் நமச்சிவாயம் தலைமையில், உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் திருவுருவச் சிலைக்கு கழகத் தொண்டர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தி பிறந்தநாள் விழாவை கொண்டாடினர். இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வின் போது முன்னாள் ஒன்றிய குழு துணைத் தலைவர் சாய்ராம் மற்றும் லயன் வெங்கடேசன், சாய் அருண் மற்றும் கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்ட அறங்காவலர் குழு தலைவராக தென்காசி நகர் மன்ற துணைத் தலைவர் சுப்பையா பதவியேற்பு

தென்காசி பிப்.25-

தென்காசி மாவட்ட அறங்காவலர் குழு தலைவராக, தென்காசி நகர் மன்ற துணைத் தலைவர் சுப்பையா பதவியேற்று கொண்டார்.

நிகழ்ச்சியில் முன்னாள் வடக்கு மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான செல்லத்துரை தலைமையில் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, கடையநல்லூர் நகர செயலாளர் அப்பாஸ்,



நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், துணைத் தலைவர் ராசையா, தென்காசி நகர்மன்ற தலைவரும், நகர செயலாளருமான சாதிர், ஒன்றிய குழு துணைத் தலைவர் ஐவேந்திரன், தினேஷ், 1-வது வார்டு செயலாளர் காளிமுத்து, 5-வது வார்டு செயலாளர் சையர் மசூது, மற்றும் கழக ஒன்றிய வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள், தொண்டர்கள் திரளாக பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# டெல்டா மாவட்டங்களில் வரும் 27, 28-ஆம் தேதிகளில் மழைக்கு வாய்ப்பு

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை பிப்.25-

வரும் 27, 28ம் தேதிகளில் தென் தமிழக கடலோர பகுதிகள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது, அடுத்த 5 தினங்களுக்கான வானிலை முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை, 24-02-2023 முதல் 26-02-2023 வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும்.

27-02-2023 முதல் 28-02-2023 வரை தென் தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையை பொறுத்தவரை அடுத்த இரு தினங்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என கூறப்பட்டுள்ளது

# ஜெய்ப்பூரில் ஆம்புலன்சில் காலணிகளை ஏற்றிச் சென்ற டிரைவர் பணி நீக்கம்

ஜெய்ப்பூர் பிப்.25-

ஆம்புலன்சில் காலணிகளை ஏற்றிச் சென்ற வீடியோ வைரலானதையடுத்து டிரைவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் இருந்து தவுசாவுக்கு ஆம்புலன்சில் காலணிகளை ஏற்றிச்சென்ற தவுசா அரசு மருத்துவமனையின் ஆம்புலன்ஸ் டிரைவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலானதையடுத்து



இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தவுசா அரசு மருத்துவமனையின் முதன்மை மருத்துவ அதிகாரி ஷிவ்ராம் மீனா கூறியதாவது, தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட அந்த ஆம்புலன்ஸ் டிரைவரை நாங்கள் நீக்கிவிட்டோம்.

இந்த சம்பவம் குறித்து விசாரிக்க ஒரு குழுவையும் அமைத்துள்ளோம். இது தொடர்பாக குழு அறிக்கை சமர்ப்பித்ததும் நடவடிக்கை எடுக்கப்படும். தேவைப்பட்டால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது தொடர்புடைய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்படும். இது ஒரு தீவிரமான விஷயம். வியாழக்கிழமை காலையில் தான் இது என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இது குறித்து உரிய விசாரணை நடத்தப்படும் என்று உறுதியளிக்கிறேன். இவ்வாறு கூறினார்.

# நாங்கள் ஏன் தனிக்கட்சி தொடங்க வேண்டும், மக்களிடம் சென்று நீதி கேட்போம் - ஓ.பன்னீர் செல்வம் பேட்டி

சென்னை பிப்.25-

மக்களிடம் சென்று நீதி கேட்போம் என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அதிமுக பொதுக்குழு தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் நேற்று முந்தினம் உத்தரவிட்டது. அதில், இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வான பொதுக்குழு கூட்டம் செல்லும் என்று தீர்ப்பளித்தது. இதன் மூலம் அதிமுக-வின் முழு கட்டுப்பாடும் எடப்பாடி பழனிசாமி வசமாகி உள்ளது. இதன் மூலம்



ஓ.பன்னீர்செல்வம் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டது உறுதியானது. இந்நிலையில், ஓ.பன்னீர்செல்வம் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், நாங்கள் ஏன் தனிக்கட்சி தொடங்க வேண்டும்?.. மாவட்ட வாரியாக மக்களை சந்தித்து நீதி கேட்கும் பணியை விரைவில் தொடங்குவோம். அதிமுக என்பது எடப்பாடி பழனிச்சாமியின் தாத்தா ஆரம்பித்த கட்சி அல்ல, ஆணவத்தின் உச்சத்தில் பழனிச்சாமி இருக்கிறார். ஆணவத்தை அடக்கும் சக்தி அதிமுக தொடர்களுக்கு உண்டு என ஒபிஎஸ் கூறினார்.

# துருக்கியில் நிலநடுக்கத்தை தொடர்ந்து கட்டிட ஒப்பந்ததாரர்களுக்கு எதிராக கைது வாரண்ட் பிறப்பிப்பு

துருக்கி பிப்.25-

துருக்கி - சிரியா எல்லையில் கடந்த 6-ம் தேதி அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் துருக்கியில் 43 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 1 லட்சத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். நிலநடுக்கத்தில் ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின. பல நாட்கள் நடைபெற்ற மீட்பு பணிகள்



தற்போது முடிவடைந்துள்ளது. அதேவேளை, நிலநடுக்கம் தொடர்பாக துருக்கி அரசு பல்வேறு சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன்படி, உறுதியற்ற, சட்டவிரோதமாக கட்டிடங்கள் கட்டியதாக கட்டிட ஒப்பந்ததாரர்கள் பலர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. இது தொடர்பாக கட்டிட ஒப்பந்ததாரர்கள் உள்பட 171 பேருக்கு எதிராக துருக்கி நீதித்துறை கைது வாரண்ட் பிறப்பித்துள்ளது. வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் 171 பேரும் விரைவில் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உச்ச நீதிமன்றத்தில் இருந்து நீட் தேர்வு சட்ட திருத்தத்திற்கு எதிரான ரிட் மனுவை திரும்ப பெற்ற தமிழக அரசு

டெல்லி பிப்.25-

நீட் தேர்வை கட்டாயமாக்கிய மத்திய அரசின் சட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்த ரிட் மனுவை திரும்ப பெற தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

கடந்த 2017-18 ம் ஆண்டில் மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட நீட் தேர்வை கட்டாயமாக்கிய சட்டத்திருத்தத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு ரிட் மனு தாக்கல் செய்தது. இந்த மனு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது இளங்கலை மருத்துவ படிப்புகளுக்கான மசோதா கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அது ஜனாதிபதியின் பரிசீலனையில் இருப்பதை சுட்டிக்காட்டி ரிட் மனு மீதான விசாரணையை ஆறு மாதத்திற்கு தள்ளி வைக்குமாறு தமிழ்நாடு அரசின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. அந்த கோரிக்கையை ஏற்ற உச்ச நீதிமன்றம் இந்த விசாரணையை 12 வாரங்களுக்கு தள்ளி வைத்தது. இந்த நிலையில்



இந்த மனு மீதான விசாரணை நேற்று மீண்டும் நடைபெற்றது. அப்பொழுது தமிழ்நாடு அரசு சார்பில் ரிட் மனுவை திரும்பப் பெறக் கோரி மனு தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அப்பொழுது நீதிபதிகள், இந்த விவகாரத்தில் நீங்கள் எப்படி ரிட் மனுவை தாக்கல் செய்தீர்கள்? இந்த யோசனையை அளித்தது யார்? என்று கேட்டபோது தமிழ்நாடு அரசின் சார்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர், இந்த ரிட் மனுவானது கடந்த ஆட்சியில் தாக்கல் செய்யப்பட்டது என்று தெரிவித்தார். எந்த ஆட்சியில் இருந்தாலும் இந்த ரிட் மனு எவ்வாறு தாக்கல் செய்யப்பட்டது என நீதிபதிகள் கேட்டபோது, கல்வி என்பது பொது பட்டியலில் இருப்பதால், இதுபோன்ற ரிட் மனுக்களை தாக்கல் செய்ய முடியும் என்று அவர் பதில் அளித்தார். மேலும் நீட் தேர்வை கட்டாயமாக்கிய சட்ட திருத்தத்திற்கு எதிராக புதிய வழக்கு என்பது பிப்ரவரி 18-ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் நிலையில், இந்த ரிட் மனுவை நாங்கள் திரும்ப பெற அனுமதிக்க வேண்டுமென்று என்று தெரிவித்தார். இதை ஏற்ற உச்ச நீதிமன்றம் நீட் தேர்வை கட்டாயமாக்கிய சட்டத்தை எதிர்த்த ரிட் மனுவை திரும்ப பெற அனுமதி அளித்துள்ளது.

# ஈரோட்டில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் இவிகேஎஸ் இளங்கோவனை ஆதரித்து பிரச்சாரம்

ஈரோடு, பிப். 25 –

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி காங்கிரஸ் கட்சி வேட்பாளராக ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போட்டியிடுகிறார். அவருக்கு கை சின்னத்தில் வாக்குகள் சேகரித்து முன்னாள் மத்திய மந்திரி தயாநிதிமாறன் எம்.பி. வீரப்பன் சத்திரம் பகுதியில் பிரசாரம் செய்தார்.

வீரப்பன்சத்திரம் முனியப்பன் கோவிலில் இருந்து பெரியவலசு செல்லும் பாரதிதாசன் சாலையில் அவர் வீடு, வீடாக சென்று பொதுமக்களை சந்தித்து துண்டு பிரசுரங்கள் வழங்கி வாக்கு சேகரித்தார். அவருக்கு பலரும் தங்கள் வீட்டின் முன்பு ஆரத்தி எடுத்து வரவேற்றனர். அவருடன் அமைச்சர் எ.வ.வேலு, சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சிற்றரசு ஆகியோர் இருந்தனர்.



பின்னர் அந்த பகுதியில் பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்து முன்னாள் மத்திய மந்திரி தயாநிதி மாறன் பேசினார். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் எதற்கும் அஞ்ச மாட்டோம். யாருக்காகவும் தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று செயல்படுகிறார். தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்றி, முதல் அமைச்சர்களில் நம்பர் 1 முதல் அமைச்சராக உள்ளார். கொரோனா நிதி ரூ.4 ஆயிரம், நிவாரண பொருட்கள் என்று அறிவித்த அனைத்தையும் கொடுத்தார். ஈரோடு மாநகராட்சி பகுதிக்கு ரூ.1,200 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற உள்ளன என முன்னாள் மத்திய மந்திரி தயாநிதி மாறன் கூறினார்.

இந்த பிரசாரத்தின் போது அமைச்சர் சு.முத்துசாமி, நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தன், மாவட்ட துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், இளைஞர் அணி மாநில துணை செயலாளர் கே.ஈ.பிரகாஷ், துணை மேயர் செல்வராஜ் உள்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், காட்டுப்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ தெருவீதி அம்மன் ஆலய ஜீர்னோர்தாரன புனராவர்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. பரிவார தெய்வங்களான அருள்மிகு தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, துர்க்கை, நவகிரக தெய்வங்களுக்கும் சதுர்த்தி திதி உத்திரட்டாதி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதனத்தில் அனைத்து தெய்வங்களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றது, ஆலய நிர்வாகிகள் மற்றும் விழா குழுவினர் ஊர் பொதுமக்கள் சிறப்பாக கும்பாபிஷேகம் இவ்விழாவை செய்திருந்தனர். வருகை தந்து சாமி தரிசனம் செய்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகி சரவணன் மற்றும் காட்டுப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ஷீலா சரவணன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் ரிவேரா விளையாட்டு கலை நிகழ்ச்சி இந்திய கிரிக்கெட் முன்னாள் கேப்டன் ரஹானே தொடங்கி வைத்தார்

வேலூர், பிப். 25 –

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் சர்வதேச கலை மற்றும் கலாச்சார விளையாட்டுப் போட்டி திருவிழா பல்கலைக்கழகத்தின் துணைத் தலைவர் செல்வம் மற்றும் சங்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் அஜிங்கியே ரஹானே கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, தேசிய கொடியை ஏற்றி வைத்து, கலை மற்றும் பாரம்பரிய ரிவேரா விளையாட்டு திருவிழாவை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் விஜடி மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் பெண்கள் பிரிவில் முதலிடம் பெற்ற மதுராவுக்கும் ஆண்கள் பிரிவில் முதலிடம் பெற்ற பாஸ்கருக்கும் ரஹானே வாழ்த்து தெரிவித்து பாராட்டி, பதக்கம் மற்றும் சான்றுகளை வழங்கினார்.

ரஹானே பேசுகையில், தற்போது ஐபிஎல் போட்டிகளில் சிஎஸ்கே



அணிக்கு விளையாடுவதால் உற்சாக வரவேற்பு அளித்த மாணவ, மாணவிகளை பாராட்டுகின்றேன். இந்த சர்வதேச கலாச்சார விழாவினை துவக்கி வைக்கும் விழாவில் பங்கேற்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மேலும் எனக்கு மகிழ்ச்சி என்னவென்றால் ஐபிஎல் போட்டிகளில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு விளையாடுவதுதான். இது எனக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மாணவர்களாகிய நீங்கள் கல்விக்கு எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கின்றீர்களோ அதைப்போலவே விளையாட்டிற்கும், கலை நிகழ்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து அதில் பங்கேற்க வேண்டும்.

நான் அவ்வளவாக கல்லூரிக்கு சென்றதில்லை. அதனால் இது போன்ற கலை விழாக்களில் பங்கேற்பதில்லை. இளைஞர்களாகிய நீங்கள் நல்ல எதிர்காலத்தை முடிவு செய்து மேம்பாடடைய அன்போடு கேட்டு கொள்கின்றேன் என பேசினார்.

இதனைத் தொடர்ந்து விஜடி பல்கலைக்கழக நிர்வாகம் சார்பாக வாழ்த்துரை வழங்கினர். விழாவின் இறுதியில் சிறப்பு விருந்தினர் ரஹானே மரக்கன்று வைத்து, தண்ணீர் ஊற்றி, வாழ்த்து தெரிவித்து, நன்றியுரையாற்றி, விளையாட்டு, கலை நிகழ்ச்சியை சிறப்பித்தார்.



மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 75 வது பிறந்த நாளை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள எம்ஜிஆர் சிலைக்கு அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதுடன் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த ஜெயலலிதா திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் ஏழை எளிய மக்களுக்கு, இனிப்புகள், அன்னதானம் வழங்கினர். இதில் அதிமுகவின் மாவட்ட ஒன்றிய பேரூர் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி மாநில குடிமை பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் சாய் சரவணன்குமார் பிறந்த நாளை முன்னிட்டு காரைக்கால் அரசு மருத்துவமனையில் புதுச்சேரி மாநில பாரதிய ஜனதா கட்சியின் சிறுபான்மை பிரிவு மாநில செயலாளர் அப்துல் பாசித் தலைமையிலும் தெற்கு தொகுதி பாரதிய ஜனதா கட்சி பொறுப்பாளர் நெடுமாறன் முன்னிலையிலும் இரத்த தான முகாம் காரைக்கால் அரசு மருத்துவமனையில் சிறப்பாக நடைபெற்றது.. இந்நிகழ்ச்சியில் தெற்கு தொகுதி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள்...

# திருவள்ளூர், பாகல்மேடு கிராமத்தில் மின்சாரம் தாக்கியதில் சேடை உழுத 2 மாடுகள் பலி

ஊத்துக்கோட்டை, பிப். 25 –

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பாகல்மேடு கிராமத்தைச் சேர்ந்தவர் ஏகாம்பரம். இவரது நிலத்தில் பயிர் வைக்க சேடை உழும் பணி நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

எனவே புன்னப்பாக்கம் கிராமத்தை சேர்ந்த வாசுதேவன் (வயது 53) என்ற கூலி தொழிலாளி இரண்டு காளை மாடுகளுடன் பலகையை அமைத்து சேடை உழுது கொண்டிருந்தார். இந்த விவசாய நிலத்தின் நடுவே இருந்த இரும்பு மின்சார கம்பத்தில் திடீரென மின்சாரம் பாய்ந்ததாம்.

இதனால் சேடை உழுது கொண்டிருந்த சேறு முழுவதும் மின்சாரம் பாய்ந்ததில்



இரண்டு மாடுகளும் சேற்றில் விழுந்து துடிதுடித்து சம்பவ இடத்திலேயே பலியானது. மின்சாரம் தாக்கியதால் வாசுதேவன் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! என்று கூக்குரலிட்டார்.

அருகில் இருந்தவர்கள் உடனடியாக மின்சாரக் கம்பத்துக்கு வரும் மின் இணைப்பை துண்டித்தனர். இதற்குள் வாசுதேவன் மயங்கி சேற்றில் விழுந்தார். உடனடியாக 108 ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு அவரை மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த வெங்கல் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம் தலைமையில் போலீசார் விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டனர். இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



காரைக்கால். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தெற்கு தொகுதி செயலாளராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரபல தொழிலதிபர் தமிமுல் அன்சாரி காரைக்கால் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சரும் இந்நாள் சட்டமன்ற உறுப்பினருமான நாஜிம் சந்தித்து வாழ்த்து பெற்றார்

# செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.1 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள்

## மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் ஆய்வு

செம்பனார்கோவில், பிப். 25–

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம் முடிகண்டநல்லூர், செம்பனார்கோவில், ஆக்கூர் ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் ரூ.1 கோடி செலவில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம் முடிகண்டநல்லூரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.6.86 லட்சம் செலவில் நர்சரி கார்டன் அமைக்கப்பட்டுள்ள பணியினையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.17.50 லட்சம் செலவில் சித்திரை வாய்க்கால் மறு சீரமைக்கும் பணியினையும், செம்பனார்கோவில் கிராம ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.1.90 லட்சம் செலவில் சத்தியமூர்த்தி தெருவில் மரக்கன்றுகளுக்கு பாதுகாப்பாக கம்பிவேலி அமைக்கும் பணியினையும், ரூ.4.90 லட்சம் செலவில் சத்தியமூர்த்தி தெருவில் மீன் மார்கெட் அமைக்கும் பணியினையும், ஆக்கூர் கிராம ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ஆக்கூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ.5.86 லட்சம்



செலவில் சமையல் கூடம் கட்டுமான பணியினையும், ரூ.1.85 லட்சம் செலவில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கழிவறை கட்டும் பணியினையும் மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாகவும், தரமாகவும், செய்து முடிக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

முன்னதாக, செம்பனார்கோவில் கிளை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் தரத்தினையும், பொருட்கள் வாங்க வந்திருந்த மக்களிடம் அவர்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார்.

அதைத் தொடர்ந்து, செம்பனார்கோவிலில் புதிதாக கட்டப்பட்ட மீன் மார்கெட்டை ஆய்வு செய்தார். மேலும், தரமாக கட்ட வேண்டும் எனவும், கடை உரிமம் போட வேண்டும். அதன் மூலம் ஊராட்சிக்கு வருமானம் வர வேண்டும். அதை வைத்து நன்கு பராமரிக்க வேண்டும். சித்திரை வாய்க்கால் 100 நாள் பணியாளர்களைக் கொண்டு தூர்வாரும் பணியினை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்ததோடு, வருகை பதிவேட்டையும் ஆய்வு செய்தார். ஆக்கூர் நடுநிலைப் பள்ளியில் மதிய உணவினை உண்டு பரிசோதனை செய்தார். உணவு சுவையாகவும், தரமாகவும் வழங்க உத்தரவிட்டார். உடனடியாக சமையல் எரிவாயு கொண்டு சமைக்க உத்தரவிட்டார். ஆசிரியர்களின் கோரிக்கைகள் ஏற்று கூடுதல் கழிவறை கட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், வகுப்பறையில் மாணவர்களின் கற்றல் திறனை கேள்வி கேட்டு அவர்களின் திறனை மாவட்ட ஆட்சியர் கண்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, செம்பனார்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீனா, விஜயலெட்சுமி, ஆக்கூர் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரமோகன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சித்துறை, வருவாய் துறையை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.



மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதாவின் 75 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மயிலாடுதுறையில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல அலுவலகத்தில் அண்ணா தொழிற்சங்கத்தின் மண்டல செயலாளர் சங்கர் தலைமையில் நுகர்வோர் வாணிபக் கழக பணியாளர்கள், அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள் ஜெயலலிதாவின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர்.

# ஈரோடு கிழக்கு தொகுதி பி.பி.அக்ரஹாரம் பகுதியில் பூண்டி ஒன்றிய திமுக நிர்வாகிகள் வாக்கு சேகரிப்பு

ஊத்துக்கோட்டை, பிப். 25 –

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் அறிவுறுத்தலின்படி ஈரோடுகிழக்குதொகுதிக்கு உட்பட்ட சூரியம்பாளையம் பகுதியில் உள்ள பி.பி.அக்ரஹாரம் பகுதியில் பாகம் எண்: 18 வார்டு எண்:7 க்கு உட்பட்ட பிராமண பெரிய அக்ரஹாரம், சின்ன மீரான் சந்து, மங்கையம்மாள் வீதி, ஈதிகா வீதி, ஆலிம்ஷா வீதி ஆகிய இடங்களில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் இ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு வாக்கு



சேகரித்தனர்.

இதில் பூண்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.கே.சந்திரசேகர், பூண்டி வடக்கு ஒன்றிய செயலாளர் எம். பொன்னுசாமி (எ) ஜான் ஆகியோர் தலைமையில், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், பேரிட்டிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவருமான வழக்கறிஞர் தில்லைகுமார், ஒன்றிய நிர்வாகிகள் ராகவன், கூனிபாளையம் ரகு, வேல்முருகன், குருமூர்த்தி நந்திமங்கலம் விஜியன், காண்டீபன், ரஞ்சித், எட்வர்ட் துரை, வேலு, வழக்கறிஞர்கள் பிரகாஷ், தமிழரசன், தகவல் தொழில் நுட்ப அணி யுகேந்தர்குமார் மற்றும் பூண்டி ஒன்றிய நிர்வாகிகளுடன் வீடு, வீடாக சென்று கை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.



வேலூர் மாவட்டத்தில் இந்திய குடியரசு கட்சி அலுவலகத்திற்கு வருகை தந்த அழகு பிட்னஸ் உரிமையாளர் ரஜினிகாந்த், மாவட்ட தலைவர் இராசி தலித்குமாரை மரியாதை நிமித்தமாக சந்தித்து பொன்னாடை அணிவித்தார்.



செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன்பேட்டை வேந்தர் நகரில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகத்தில் வேளாண் துறையில் இளம் அறிவியல் நான்காம் ஆண்டு படிக்கும் மாணவிகள் சக்தி ஸ்வேத்தா, வினிதா, பவதாரணி, சுப்ரா, தீபிகா, சுஜிதா, புவனேஸ்வரி, மோனிகா ஸ்ரீ, திவ்யா, தீபா ஆகியோர் "கிராம தங்கல் திட்டம்" கீழ் மதுராந்தகம் ஒன்றியம் கிராமத்தில் மூன்று மாதங்கள் தங்கி விவசாய மக்களுக்கு வேளாண்மை பற்றி விழிப்புணர்வையும் மற்றும் தங்களுக்கு தெரிந்த விஷயங்களையும் தெரிவிக்கின்றனர். இம் மாணவிகள் கீழ்க்கரணை கிராம விவசாயிகளுக்கு உயிர்வாயு ஆலையின் நன்மைகள், பயன்கள் மற்றும் அதை எப்படி அமைக்கலாம் போன்றவற்றை கூறினார்கள். பின்னர் விவசாயிகள் தங்களுக்கு இருந்த கருத்துகள் மற்றும் கேள்விகளை எழுப்பினர். இறுதியாக விவசாய மக்கள் மாணவிகள் கூறியது தங்களுக்கு மிக பயனுள்ளதாக உள்ளது என்று பாராட்டினர்.



தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல் பணியில் உள்ள திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அதிமுக செயலாளர், செய்யாறு முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தூசி கே.மோகன், அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற மாநில துணைச் செயலாளர் ஜாகிர் உசேன், ஒன்றிய செயலாளர்கள் அனக்காவூர் துரை, வக்கீல் சங்கர், அருகாவூர் அரங்கநாதன், தென் சென்னை அம்மா பேரவை மாவட்ட தலைவர் குலாம் நபி ஆசாத், அழகிரி, ராஜேஷ்கன்னா ஆகியோர் ஈரோடு மரப்பாலம் பகுதியில் இனிப்புகள் வழங்கி பிறந்தநாளை கொண்டாடினர்.

# புதுக்கோட்டை ஜெ.ஜெ. கல்லூரியில் இயற்பியல் துறை சிறப்பு சொற்பொழிவு

**புதுக்கோட்டை பிப்.25–**

புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், இயற்பியல் துறை சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் திருச்சிராப்பள்ளி, ஜமால் முகமது கல்லூரி இயற்பியல் துறை தலைவர் ஜமால் முகமது ஜாபர் சிறப்பு பேச்சாளராக பங்கேற்றார்.

ஜமால் முகமது ஜாபர் "உங்களில் மறைந்திருக்கும் சாத்தியக் கூறுகள்" என்ற தலைப்பில் ஒரு சுருக்கமான விவாதத்தை வழங்கினார். நாம் எப்படி இருக்கிறோம், எப்படி இருக்க வேண்டும் என்று நமது குணங்களை அறியும் வகையில் அமர்வு ஏற்படுத்தப்பட்டது. எல்லாச் சூழ்நிலைகளிலும் நாம் எப்படி நேர்மறை எண்ணத்துடன் இருக்க வேண்டும் மற்றும் நம்மனதை எல்லா



எதிர்மறையிலிருந்தும் விலக்கி வைக்க வேண்டும் என்பது பற்றியது. நமது நிறம், உயரம் மற்றும் உடல் தோற்றம் பற்றி நாம் ஒரு போதும் தாழ்வாக உணரக்கூடாது. அது முக்கியமில்லை. முயற்சி தான் நம் வாழ்க்கையை சிறப்பாக்குகிறது, தோற்றம் அல்ல. நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள் அல்லது நீங்கள் படித்த இடத்தால் நீங்கள் வரையறுக்கப் படவில்லை. உழைப்பு தான் நம்மை வரையறுக்கும். அமர்வில் பல ஐக்யூ கேள்விகள் இருந்தன. அது கவனத்தை மிகவும் சுவாரஸ்யமாக்கியது. முழு அமர்வும் முற்றிலும் நேர்மறையானது.

இயற்பியல் துறை தலைவர் முரளி இச்சொற்பொழிவிற்கு தலைமை தாங்கினார். ஸ்ரீவைஷ்ணவி முதுகலை இரண்டாம் ஆண்டு இயற்பியல் துறை மாணவி வரவேற்புரை வழங்கினார், மற்றும் இளங்கலை மூன்றாம் ஆண்டு இயற்பியல் துறை மாணவி கனிமொழி நன்றி உரையாற்றினார்.

# புதுக்கோட்டை செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்



புதுக்கோட்டை பிப்.25-

புதுக்கோட்டை அருகே உள்ள செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் சென்னையை சேர்ந்த பிரேக்ஸ் இந்தியா நிறுவனத்திற்கான வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் செல்வராஜ் தலைமை வகித்து பேசினார். கல்லூரி தலைவர் செல்வராஜ், நிர்வாக இயக்குநர்.வயிரவன், செயலாளர் தியாகராஜன் மற்றும் மனிதவள இயக்குநர் மீனா வயிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். கல்லூரியின் மின்னியல் துறை மூத்த ஆசிரியை கலைவாணி வரவேற்புரை வழங்கினார்கள்.

பிரேக்ஸ் இந்தியா நிறுவனத்திற்கு ஆட்களை தேர்வு செய்ய வருகை தந்திருந்த அந்நிறுவனத்தின் பொது மேலாளர் இலக்ஷ்மிநரசிம்மன் மற்றும் மனிதவள துணை மேலாளர் உமாபதி ஆகியோர் தகுதியுடைய இயந்திரவியல், வாகனவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறையை சேர்ந்த 98 மாணவர்களை எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு உட்படுத்தி மாணவர்களின் திறமையை இனம் கண்டார்கள். இத்தகைய பல்முனை தேர்வுக்குப் பின் 84 மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கான ஆணையை அந்நிறுவன மேலாளர் அவர்கள் வழங்கிய பின் மாணவர்களிடையே உரையாற்றினார்.

கல்லூரி முதன்மை செயல் அலுவலர் கார்த்திக் தேர்வான மாணவர்களை வாழ்த்தி பேசினார்கள். இதில் உப தலைவர் நடராஜன், தாளாளர் ராமையா, செயல் இயக்குநர்.பாண்டி கிருஷ்ணன், மனிதவள இயக்குனர் மீனா வயிரவன் கல்லூரி நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக வாகனவியல் துறை மூத்த ஆசிரியை உமா சீலன் நன்றியுரை வழங்கினார்கள்.

# சத்தீஸ்கரில் டிரக் மீது வேன் மோதிய விபத்தில் 11 பேர் பலி

சத்தீஸ்கர் பிப்.25-

சத்தீஸ்கரில் டிரக் மீது வேன் மோதிய பயங்கர விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

சத்தீஸ்கர் மாநிலம் பலோடாபஜார்-பட்டாபரா மாவட்டத்தில் உள்ள பட்டாபரா காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட கமரியா கிராமத்திற்கு அருகே டிரக் மீது பிக்-அப் வேன் மோதி பயங்கர விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 4 குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 12 பேர் காயமடைந்தனர். நேற்று முந்தினம் இரவு இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் சிக்கியவர்கள் சிம்கா பகுதியில் உள்ள கிலோரா கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அர்ஜுனி பகுதியில் ஒரு குடும்ப விழாவில் கலந்து கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டதாகவும் போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விபத்து குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விபத்தில், காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இறந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. போலீசார் இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மதுரை முகையத் ஷா சர்குரோ வக்பு வாரியக் கல்லூரியில் 47-வது பட்டமளிப்பு விழா



மதுரை பிப்.25-

மதுரை முகையத் ஷா சர்குரோ வக்பு வாரியக் கல்லூரியில் 47-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கல்லூரியைச் சேர்ந்த 1065 இளநிலை மாணவர்களும் 105 முதுநிலை மாணவர்கள் என, மொத்தம் 1170 மாணவர்கள் பட்டம் பெற்றனர். நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் முகமது அல்லம் வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளரும், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருமான அனீஷ் சேகர் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். சிறப்பு விருந்தினரான மதுரை காமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் குமார் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட துணைவேந்தர், மாணவ மாணவிகளுக்கு பட்டங்களையும், விருதுகளையும், பதக்கங்களையும், வழங்கி பேசியதாவது,

பட்டம் பெற்றவர்கள் இத்தோடு தங்களது முயற்சியை நிறுத்தி விடாமல் கல்லூரிக்கும்,பெற்றோருக்கும் பெருமை சேர்க்கும் வகையில் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும். கல்லூரியில் தேர்வு செய்த துறைகளுக்கு ஏற்ப திறமைகளையும் வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.அரசுமற்றும் பல்வேறு நிறுவனங்களில் ஏராளமான வேலை வாய்ப்புகள் உங்களுக்காக காத்திருக்கின்றன. அந்த துறைகளில் நீங்கள் சாதனை படைக்க வேண்டும். மேலும், உங்களுக்கு ஒழுக்கம், கல்வி இவை இரண்டும் இருந்தால் தான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என, மாணவ மாணவியர்களை வாழ்த்தி, சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி நிறுவன உறுப்பினர் ஜனாப். இம்தியாஸ்,ஆட்சி மன்ற குழு உறுப்பினர்கள் முகமது அஃதுல்லா மற்றும் லியாகத் அலி, பல்கலைக்கழக உறுப்பினர் இராமகிருஷ்ணன், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பாதுகாப்பாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியில் நுண்ணுயிரி நூதனம் கல்லூரிகளுக்கு இடையிலான துறைசார் போட்டி




புதுக்கோட்டை பிப்.25-

புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நேற்று நுண்ணுயிரியல் துறையில் 'நுண்ணுயிரி நூதனம்' 2023 என்ற தலைப்பில் கல்லூரிகளுக்கு இடையிலான துறைசார் போட்டிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் கவிதா சுப்பிரமணியன் உரையாற்றி நிகழ்ச்சிகளை துவங்கி வைத்தார். அவர்தம் உரையில், மாணவர்கள் கல்லூரியில் படிக்கும்போதே தங்களது தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் நல்ல பழக்க வழக்கங்களை கொண்டவர்களாகவும் அறிவு திறன் கொண்டவர்களாகவும் விளங்க வேண்டும் என்று கூறினார்.

அதனைத் தொடர்ந்து உயிர் அறிவியல் தொடர்பான புதிய பரிமாணங்கள் வளர்ச்சிகள் கருத்து உருவாக்கங்கள் ஆகியவற்றை மையப்படுத்தி மாணாக்கர்கள் இடையே போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் வாயிலாக கருத்தூட்டம் செய்யப்பட்டது. இதில் டாக்டர் உமையாள் ராமநாதன் மகளிர் கல்லூரி-காரைக்குடி, மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி தஞ்சாவூர் மற்றும் ஆறுமுகம்பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி திருப்பத்தூர் ஆகிய கல்லூரிகள் கலந்து கொண்டனர். இதில் மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி தஞ்சாவூர் சிறப்பு நிலை தகுதியைப் பெற்றனர்.

கல்லூரி முதல்வர் பரசுராமன் மாணவர்களை வாழ்த்தி பேசினார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் கவிதா சுப்பிரமணியன் சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

முன்னதாக கல்லூரி ஒருங்கிணைப்பாளரும் நுண்ணுயிரியல் துறை தலைவருமான ஜீவன் வரவேற்றார். நிறைவாக உதவி பேராசிரியர் பூர்ணிமா நன்றியுரை கூறினார்.

# அரியலூரில் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் சங்க ஆர்ப்பாட்டம்



அரியலூர் பிப்.25-

அரியலூரில் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் சங்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மத்திய அரசின் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையகம் (டிராய்) நடைமுறைப்படுத்திய, (என்டிஓ.3) கேபிள் டிவி கட்டண சேனல்களின் விலை உயர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, அரியலூர் பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகே, தமிழக கேபிள் டிவி ஆபரேட்டர்கள் பொது நல சங்கத்தின், அரியலூர் மாவட்ட கிளை சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, சங்கத்தின் மாவட்ட தலைவர் ரமேஷ் குமார் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் ஆண்டிமடம் ஜெய்குமார் வரவேற்று பேசினார்.

சங்கத்தின் மாநில துணைத் தலைவர் கந்தன் சிறப்புரையாற்றிய இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், சங்கஉறுப்பினர்கள் அரியலூர் ஜார்ஜ், நல்லாம்பாளையம் குமார், வாலாஜா நகரம் செல்வராஜன், பழனியப்பன், சௌந்தர்ராஜன், அறிவொளி, அழகேசன், கொளஞ்சிநாதன், அசோக் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

முடிவில் சங்க நிர்வாகி திருஞானம் நன்றி கூறினார்.

## பரிக்கல் ஸ்ரீ லட்சுமி நரசிம்ம பெருமாள் கோவில்

# திருப்பணிகளை விரைந்து முடிக்க பாஜக மாநில துணைத் தலைவர் திருப்பதி நாராயணன் வேண்டுகோள்



கள்ளக்குறிச்சி பிப்.25-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், பரிக்கல் கிராமத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த ஸ்ரீகனகவல்லி தாயார் சமேத ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் கோவில் அமைந்துள்ளது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இத்திருக்கோவிலை திருப்பணிக்காக கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை பணிகள் நடைபெற்று வருவதால், தினம் தோறும் உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் இக்கோவிலுக்கு வந்து மூலவரை தரிசிக்க முடியாமல் செல்வதாக பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று பாரதிய ஜனதா கட்சியின் மாநில துணைத்தலைவர் திருப்பதி நாராயணன் தரிசனம் செய்ய இக்கோவிலுக்கு வருகை புரிந்தார், அப்பொழுது அவர் கூறுகையில் மிகவும் சிறப்பு வாய்ந்த இக்கோவில் திருப்பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக மிகவும் தொய்வாக நடைபெறுவதற்கு என்ன காரணம், கோவில் திருப்பணி முடிப்பதற்கு இந்து அறநிலைத்துறைக்கு பணம் இல்லையா அல்லது மனம் இல்லையா என கேள்வி எழுப்பினார், எனவே இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு உடனடியாக இக்கோவிலுக்கு வருகை புரிந்து ஆய்வு ஆய்வு மேற்கொண்டு, திருப்பணிகளை விரைந்து முடித்து, குடமுழுக்கு விழா நடத்தி பக்தர்களுக்கு சிரமமின்றி தரிசனம் செய்ய வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிகழ்வின் போது கள்ளக்குறிச்சி மாவட்ட தலைவர் அருள், மாவட்ட பொதுச்செயலாளர் முருகன், மாவட்ட துணை தலைவர் கஜேந்திரன், உள்ளாட்சி பிரிவு மாவட்ட தலைவர் ராஜேந்திரன், திருநாவலூர் மேற்கு ஒன்றிய தலைவர் வீரபாண்டியன், ஒன்றியபிரபாரி கோவிந்தன், திருநாவலூர் கிழக்கு ஒன்றிய தலைவர் பாலு, திருவெண்ணைநல்லூர் தெற்கு ஒன்றிய தலைவர் கதிரவன், ஒன்றிய பொதுச்செயலாளர் வெங்கிடேசன், பரிக்கல் முருகவேல், ஓபிசி அணி துணை தலைவர் முருகன், வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விருதுநகரில் கல்லூரி மாணவிகளை அநாகரிகமாக பேசிய முதல்வர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி சுவரொட்டிகள் ஒட்டியதால் பரபரப்பு




விருதுநகர் பிப்.25-

விருதுநகரில், மாணவிகளை அநாகரிகமான முறையில் பேசிய கல்லூரி முதல்வர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி, சுவரொட்டிகள் ஒட்டியதால் பரபரப்பு ஏற்பட்டது.

விருதுநகரில், மாணவிகளை அநாகரீகமான முறையில் பேசிய கல்லூரி முதல்வர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி, சுவரொட்டிகள் ஒட்டியதால் பரபரப்பு ஏற்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே இயங்கி வரும் தனியார் பல்கலைக்கழகத்தில், பி.காம் படித்து வரும் மாணவ மாணவிகள், நண்பனின் சகோதரன் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க சென்றுள்ளனர்.

2நாள்விடுமுறைக்குபிறகு கல்லூரி வந்த மாணவிகளை, கல்லூரி முதல்வர் சந்திரா என்பவர், அருவெறுக்கத்தக்க முறையில் பேசியதாக கூறப்படுகிறது. இதற்கு கண்டனம் தெரிவித்து, மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

# தெலுங்கானாவில் உடற்பயிற்சியின் போது மாரடைப்பு ஏற்பட்டு போலீஸ் கான்ஸ்டபிள் பலி

ஐதராபாத் பிப்.25-

தெலுங்கானா மாநிலம், தெகந்தராபாத் ஆசிப் நகரில் உள்ள காவல் நிலையத்தில் கான்ஸ்டபிளாக பணியாற்றி வந்தவர் விஷால்(24). இவர் மொரட்பள்ளியில் உள்ள ஜீம்மில் சேர்ந்து உடற்பயிற்சி செய்வது வழக்கம். இந்நிலையில், வழக்கம் போல் நேற்று முந்தினம் இரவு 8 மணியளவில் ஜிம்மிற்கு வந்த விஷால் உடற்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்போது, திடீரென விஷாலுக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

இதனால், உடற்பயிற்சியில் ஈடுபட்டு கொண்டிருந்த இடத்திலேயே விஷால் சுருண்டு விழுந்தார். விஷால் மயங்கி விழுந்ததை கண்டு அங்கு பயிற்சி செய்து கொண்டிருந்தவர்கள் அவரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். விஷாலை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். ஜிம்மில் உடற்பயிற்சி செய்தபோது விஷால் சுருண்டு விழும் வீடியோ தற்போது சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

# அதிமுக தலைமை அலுவலகத்தில் எடப்பாடி பழனிச்சாமி ஜெயலலிதா உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



சென்னை பிப்.25-

அதிமுக இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமியை உச்ச நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.

அதிமுக பொதுக்குழு கூட்டம் தொடர்பாக ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் நேற்று முந்தினம் விசாரித்தது. அப்போது, அதிமுக இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வான பொதுக்குழு கூட்டம் செல்லும் என்று அதிரடி உத்தரவிட்டது. இதன் மூலம் அதிமுக-வின் முழு கட்டுப்பாடும் எடப்பாடி பழனிசாமி வசமாகி உள்ளது.

இந்நிலையில், மறைந்த முன்னாள் முதலமைச்சரும், அதிமுக முன்னாள் பொதுச் செயலாளருமான ஜெயலலிதாவின் 75-வது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, அதிமுக இடைக்காலபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்திற்கு சென்றார். அங்கு மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் உருவச் சிலைக்கு எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மேலும், முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் உருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர், அங்குள்ள கொடிக்கம்பத்தில் அதிமுக கொடியேற்றினார். இந்த நிகழ்ச்சியில் அதிமுக எம்.எல்.ஏ.க்கள், முன்னாள் எம்.பி.க்கள், அதிமுக நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# டிஜி யாத்ரா மூலம் 1.6 லட்சத்திற்கும் மேற்பட்ட விமானப் பயணிகள் பயனடைந்துள்ளனர் – மத்திய அரசு தகவல்



டெல்லி பிப்.25-

டிஜி யாத்ரா மூலம் 1.6 லட்சத்திற்கும் மேற்பட்ட விமானப் பயணிகள் பயனடைந்துள்ளனர் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2022-ஆம் ஆண்டு டிசம்பர் 1-ம் தேதி முதல் 2023-ஆம் ஆண்டு பிப்ரவரி 14-ஆம் தேதி வரை 1.6 லட்சத்திற்கும் மேற்பட்ட விமானப் பயணிகள் டிஜி யாத்ரா முறையைப் பயன்படுத்தியுள்ளனர் என்று உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. டிஜி யாத்ரா என்பது முக அங்கீகார தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விமான நிலையங்களில் பயணிகள் விமானத்தில் ஏறுவதற்கான பயோமெட்ரிக் முறையாகும். பயணச்சீட்டு, அடையாள அட்டை ஆகியவற்றை பல்வேறு நிலைகளில் சரிபார்த்தலின் அவசியமின்றி நெரிசல் இன்றி பயணிகளுக்கு இது வசதியான முறையாக உள்ளது.

அனைத்து விமான நிலையங்களிலும்படிப்படியாக டிஜி யாத்ரா தொழில்நுட்பம் அமல்படுத்தப்பட உள்ளது. முதற்கட்டமாக டெல்லி, பெங்களூரு, வாரணாசி விமான நிலையங்களில் 1.12.2022 அன்று ஜோதிர் ஆதித்ய சிந்தியாவால் இந்த தொழில்நுட்பம் தொடங்கி வைக்கப்பட்டது.

# கர்நாடகாவில் லாரி மீது கார் மோதிய விபத்தில் ஒரு குழந்தை உட்பட 5 பேர் பலி

கர்நாடகா பிப்.25-

கர்நாடகாவில் முன்னால் சென்று கொண்டிருந்த லாரி மீது கார் மோதிய விபத்தில் ஒரு குழந்தை உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

கர்நாடகாவில் முன்னால் சென்று கொண்டிருந்த லாரி மீது கார் மோதி ஏற்பட்ட விபத்தில்ஒருகுழந்தைஉட்பட 5 பேர் உயிரிழந்தனர். மேலும் 4 பேர் காயமடைந்தனர். கர்நாடக மாநிலம் தார்வாட்டில் உள்ள தேகூர் கிராமம் அருகே நேற்று இரவு இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. முன்னதாக கார், லாரி இரண்டும் தார்வாட் நோக்கி சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில் கார் டிரைவர் பாதசாரி ஒருவர் மீது மோதாமல் தவிர்க்க முயன்றார். அப்போது எதிர்பாராத விதமாக கார், முன்னால் சென்று கொண்டிருந்த லாரி மீது மோதியது. ஆனால் இந்த சம்பவத்தில் அந்த பாதசாரியும் உயிரிழந்தார்.

மேலும் ஒரு குழந்தை உட்பட 4 பேர் உயிரிழந்தனர். விபத்தில் காயமடைந்த 4 பேரில் இருவர் கிம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்ற இருவரும் தார்வாட்டில் உள்ள மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு தெலுங்கானா கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் டுவிட்



சென்னை பிப்.25-

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 75-வது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 75-வது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. அவரது பிறந்த நாளையொட்டி அதிமுக இடைக்காலப் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னை, கிரீன்வேஸ் சாலையில் உள்ள தன்னுடைய இல்லத்தில் ஜெயலலிதா உருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிலையில் ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு தெலங்கானா கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், பணிந்து நின்றுதான் பணிசெய்ய வேண்டும் என்பதில்லை, துணிந்து நின்றும் பணி செய்யலாம் என்பதனை நிருபித்த பெண் ஆளுமை மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் செல்வி.ஜெ.ஜெயலலிதா அவர்களின் பிறந்த தினமான இன்று அவரது நினைவை போற்றுகிறேன் என பதிவிட்டுள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம் நகராட்சியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி சிகிச்சைகள் குறித்து திடீர் ஆய்வு மேற்கொண்டு மருத்துவமனையில் பார்வையிட்டார். உடன் துணை இயக்குனர் பொது சுகாதாரம் மரு. மணிமாறன், வட்டார மருத்துவ அலுவலர் மருத்துவர் மரு. வேலு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்..

# சாகித்ய அகாடமி பொதுக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து பேராசிரியர் பெரியசாமியை நீக்க வேண்டும்

## அன்புமணி ராமதாஸ் டுவிட்



*சென்னை பிப்.25-*

*பேராசிரியர் பெரியசாமி போலி சான்றிதழ் கொடுத்து பணியில் சேர்ந்தது குறித்த புகார் மீது தமிழக அரசு குழு அமைத்து விசாரணை நடத்தி வருகிறது.*

*பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தனது டுவிட்டர் பதிவில், சாகித்ய அகாடமியின் பொதுக்குழு உறுப்பினராக சேலம் பெரியார் பல்கலைக்கழக பேராசிரியர் பெரியசாமி நியமிக்கப்பட்டிருக்கிறார். இது கண்டிக்கத்தக்கது. பேராசிரியர் பெரியசாமி போலிச் சான்றிதழ் கொடுத்து பணியில் சேர்ந்தது குறித்த புகார் மீது தமிழக அரசு குழு அமைத்து விசாரணை நடத்தி வருகிறது.*

*இப்படிப்பட்ட ஒருவரை பொதுக்குழு உறுப்பினராக நியமித்தால், அது சாகித்ய அகாடமியின் மதிப்பைக் குறைத்துவிடும். சாகித்ய அகாடமி பொதுக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து பேராசிரியர் பெரியசாமியை நீக்க வேண்டும். அவர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்த தமிழ்நாடு அரசின் விசாரணையை விரைந்து நடத்தி, சட்டப்படி அவர் தண்டிக்கப்பட வேண்டும். இவ்வாறு பதிவிட்டுள்ளார்.*

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

உத்திரமேரூர் அருகே பாண்டவாக்கம் கிராமத்தில்

# ஸ்ரீ இளவழகி அம்மன் மற்றும் கெங்கை அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா



உத்திரமேரூர், பிப். 25

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட பாண்டவாக்கம் கிராமத்தில் ஸ்ரீ இளவழகி அம்மன் மற்றும் கெங்கை அம்மன் கோவில் உள்ளது.

இக்கோவில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வந்த நிலையில், கிராம பொதுமக்கள் மற்றும் கோவில் நிர்வாகத்தினர் ஒத்துழைப்புடன் கும்பாபிஷேக விழாவிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

கும்பாபிஷேக விழாவையொட்டி, கடந்த மூன்று நாட்களாக, விக்னேஸ்வர பூஜை, கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், நவகிரக ஹோமம், கோ பூஜை, தன பூஜை, கால யாக சாலை பூஜைகள் உள்ளிட்டவை நடைபெற்றது.

நேற்று காலை முதல் சிறப்பு அபிஷேகம், தீபாராதனைகள் நடந்தது. அதைத்தொடர்ந்து 9:30 மணியளவில் மேலத்தாளங்கள் முழங்க சிவாச்சாரியார்கள் தலைமையில் கால யாக சாலையில் இருந்து புறப்பட்ட கடம் கோவிலை சுற்றி வலம் வந்து கோவில் உச்சிக்கு எடுத்து செல்லப்பட்டு விமான கோபுரத்தில் கலச புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடந்தேறியது.

பின்னர் தீபாராதனைகள் காட்டப்பட்டு பக்தர்களின் புனித நீர் தெளிக்கப்பட்டது. கோவில் நிர்வாகம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. கும்பாபிஷேக விழாவில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.



உச்ச நீதிமன்ற தீர்ப்பை வரவேற்று திருமுக்கூடல் ஊராட்சியில் அதிமுகவினர் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம். அதிமுக இடைக்கால பொது செயலாளராக பொதுக்குழுவில் எடப்பாடி பழனிச்சாமி தேர்வு செய்யப்பட்டது செல்லும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதை அடுத்து தமிழகம் முழுவதும் அதிமுக கட்சியினர் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் திருமுக்கூடல் ஊராட்சியில், மாவட்ட அம்மா பேரவை துணைத் தலைவர் குணசீலன் தலைமையில், அதிமுக கட்சியினர் பட்டாசு வெடித்து பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு இனிப்புகள் வழங்கி உற்சாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வர்த்தக அணி பொருளாளர் ரமேஷ், ஒன்றிய கழக இணைச் செயலாளர் சுமதி குணசீலன், ஒன்றிய அம்மா பேரவை துணைச் செயலாளர் கோவிந்தராஜ், கிளை செயலாளர்கள், சேட், அசோக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# அரியலூரில் முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா கோலாகலம்

அரியலூர் பிப்.25-

அரியலூரில் நேற்று ஜெயலலிதா பிறந்தநாள் விழா, அதிமுக, அம்மா மக்கள் முன்னேற்ற கழகம், ஓபிஎஸ் அணி உள்ளிட்ட கட்சிகள் சார்பில், கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் 75-வது பிறந்தநாள் விழாவையொட்டி, அரியலூர் கடைவீதி மற்றும் பேருந்து நிலையம் அருகே உள்ள எம்ஜிஆர், ஜெயலலிதா உருவச்சிலைகளுக்கு, அதிமுக அரியலூர் மாவட்ட கழகம் சார்பில் ஊர்வலம் நடத்தி, கட்சி நிர்வாகி தாமரைக்குளம் கணேசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



இந்நிகழ்ச்சியில் அதிமுக ஒன்றிய கவுன்சிலர்கள் வைப்பம் சிவபெருமாள், சுந்தரவடிவேல், கடுகூர் முருகேசன், தளபதி கணேசன், வழக்கறிஞர்கள் ராமகோவிந்தராஜன், சுகுமார், ஊராட்சி மன்ற தலைவர் செங்கமலை, மாவட்ட அணி தலைவர் ஓட்டகோவில் சிவசங்கர் கட்சி நிர்வாகிகள் பழனியாண்டி, கருணாநிதி, கருப்பையா உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில், அக்கட்சியின் நகர செயலாளர் வழக்கறிஞர் கமலக்கண்ணன், கட்சி நிர்வாகிகளுடன் வந்து, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாநில ஓட்டுனர் அணி துணைச் செயலாளர் ராஜ்குமார், அரியலூர் ஒன்றிய செயலாளர்கள் கனகசபாபதி, பழனிசாமி, எம்ஜிஆர் மன்ற நிர்வாகி ஆப்டிகல் ரவிச்சந்திரன், இளைஞரணி நிர்வாகி விஜயகுமார், பேரவை மாவட்ட துணைத்தலைவர் தங்கம் கோபிநாத், ராஜேந்திரன், சக்கரபாணி, மருதாம்பாள், நகர நிர்வாகிகள் ஹரிஹரன், சின்னத்தம்பி, கார்த்திக், அருண்குமார், சரவணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அதிமுக ஓ.பன்னீர்செல்வம் அணி சார்பில், அக்கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளர் விஜய பார்த்திபன், அரியலூரில் உள்ள ஜெயலலிதாவின் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் அரியலூர் நகர செயலாளர் உத்தாண்டம் கார்த்திக், மாவட்ட அணி நிர்வாகி லோகு ராஜ், ஜெம் கண்ணன், ஒன்றிய கவுன்சிலர் சுண்டக்குடி சுரேஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## ராஜஸ்தானில் நீட் தேர்வு மையத்தில் படித்த மாணவன் தற்கொலை

கோட்டா, பிப். 25 -

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில் நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்று வந்த 17 வயது மாணவன் தற்கொலை செய்த சம்பவம் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

உத்தர பிரதேச மாநிலம் பதான் மாவட்டத்தைச் சேர்ந்த அந்த மாணவன் பெயர் அபிஷேக் யாதவ். கடந்த இரண்டு ஆண்டுகளாக கோட்டா நகரில் உள்ள நீட் பயிற்சி மையத்தில் படித்து வந்தார். அங்குள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்தார்.

கடந்தசிலதினங்களாக பயிற்சி மையத்திற்கு செல்லாமல் இருந்த அபிஷேக் யாதவ், நேற்று தனது விடுதி அறையில் உள்ள மின் விசிறியில் தூக்கி மாட்டி தற்கொலை செய்துள்ளார். தற்கொலைக்கு முன்னதாக அவர் எழுதி வைத்த குறிப்பை போலீசார் கைப்பற்றி உள்ளனர்.

அதில், தான் சிக்கலில் இருப்பதாகவும், படிப்பால் மன அழுத்தத்தில் இருப்பதாகவும் கூறி, பெற்றோரிடம் தன்னை மன்னிக்கும்படி கூறியிருக்கிறார். எனினும் படிப்பில் அழுத்தம் அதிகரிப்பதற்கு பயிற்சி நிறுவனமே பொறுப்பு என மாணவரின் தந்தை கூறி உள்ளார். கோட்டா நகரில் இந்த ஆண்டு இதுவரை 4 மாணவர்கள் தற்கொலை செய்துள்ளதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எஸ்.ஆர்.எம் வேளாண் கல்லூரி மாணவிகள் நிலக்கடலையில் பூச்சி மேலாண்மை மற்றும் தேனீ வளர்ப்பு பற்றி பயிற்சி

செங்கல்பட்டு, பிப். 25 -

செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன்பேட்டை, வேந்தர் நகரில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம்.வேளாண் அறிவியல் கல்லூரியில் பயின்றுவரும் 4 ஆம் ஆண்டு மாணவிகள், கல்லூரி முதல்வர் டாக்டர் M.ஜவஹர்லால், டாக்டர் ராஜசேகரன், டாக்டர் முஹம்மத் இக்ஷுனுல்லாஹ், டாக்டர் நவின் குமார், டாக்டர் வனிதா ஆகியோர் தலைமையில் "ஊரக வேளாண் பணி அனுபவ திட்டம்" என்ற திட்டத்தின் கீழ் ஒரத்தி கிராமத்தில் தங்கி விவசாய மக்களுக்கு வேளாண்மை பற்றிய விழிப்புணர்வை எற்படுத்தினர்.



கீழ் அத்திவாக்கம் கிராமத்தில் நிலக்கடலையில் பூச்சி மேலாண்மை மற்றும் தேனீ வளர்ப்பு ஆகிய தலைப்பில் டாக்டர் ராமஜெயம் விவசாய மக்களுக்கு விளக்கமளித்தார். நிலக்கடலையில் உள்ள பூச்சிகளின் தாக்கத்தை பற்றியும், அதன் கட்டுபடுத்தும் முறையையும் பற்றி விளக்கினார்.

தேனீக்கள் வளர்ப்பு முறையையும் அதனை பராமரிக்கும் முறையை பற்றி போராசிரியருடன் சேர்ந்து மாணவிகள் அ.ஜெ.சுருதிவர்ஷினி, ச.சிவதர்ஷினி, கி.இதழி, சிவபிரித்தி, ர.ப.ரஹ்ஷன்யா, ஆனந்த வர்ஷினி, ர.காவியா, பவானி, வ.நிவேதா, த.அபிதா ஆகியோர் பயிற்சி அளித்தனர். விவசாய மக்கள் இதில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.


வரலாறு நாளிதழ்
நிறுவனத்தில் பணிபுரிய
ஆட்கள் தேவை
காலிப் பணிஇடங்கள் 2
PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN
தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள DTP ஆப்பரேட்டர்கள்
சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.
நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை
திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்
தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட
செய்தியாளர்கள் & புகைப்படக்காரார்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்
மேலும் தொடர்புக்கு :
TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534



# நீட் தேர்வு வழக்கு வாபஸ் பெற்றது ஏன் அமைச்சர் மாசு விளக்கம்

# வேங்கைவயல் வழக்கை சிபிஐக்கு மாற்றக்கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு





# பாஜகவிற்கு நாடும் நாட்டு மக்களும் தான் முக்கியம்


சென்னை / புதுக்கோட்டை | 25.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்



**மெகர் பாபா** , இந்திய ஆன்மிகவாதி (பி.1894) (இ.1969)



**வேதரத்தினம் பிள்ளை** , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1897) (இ.1961)



**கௌதம் மேனன்** , தமிழ்த் திரைப்பட இயக்குநர் (பி.1973)



**பிரேம்ஜி அமரன்** , தமிழ்த் திரைப்பட நடிகர், பின்னணிப் பாடகர் (பி.1979)

## இன்றைய நினைவு நாள்



**விராலிமலை சண்முகம்** , இந்தி எதிர்ப்புப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1943) (இ.1965)



**பி. நாகிரெட்டி** , இந்திய திரைப்பட தயாரிப்பாளர், பத்திரிகையாளர் (பி.1912) (இ.2004)



**சுகுணா புருசோத்தமன்** , தமிழக கருநாடக இசைப் பாடகர் (பி.1941) (இ.2015)